







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 18 14.05.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

**பரமபதசோபானம்**

*9-படிகளாவன:-*

*(1) தத்துவங்கள் முதலிய வற்றை வகுத்து அறிதல்*

*(2) மனந்தளர்தல்*

*(3) உலகஸுகங்களில் ஆசையறுதல்*

*(4) தம் பாபங்களின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரகா நுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல்*

*(5) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்வதற்குக் காரணமான உபாயத்தை அநுஷ்டித்தல்*

*(6) இச்சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்*

*(7) அர்ச்சிராதிமார்க் கத்தால் செல்லுதல்*

*(8) ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்யலோகத்தைச் சேர்தல்*

*(9) அங்கு ஸர்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அனு பவித்து அந்த ஆநந்தத்திலேயே மூழ்கிக்கிடத்தல்.*

*இந்த 9-விஷயங் களையும் இப்பிரபந்தத்தில் சுருக்கியும், ரஹஸ்யத்தில் மிக விரித்தும் அருளியிருக்கிறார் ஸ்ரீ தேசிகன்.*

*************************************************************

பின் இதழிலிருந்து தொடர்ச்சி.

**மரணகாலத்தில் எம்பெருமான் முதலில் ஜீவனுடைய ஜ்ஞாநேந் த்ரியங்களையும் கர்மேந்த்ரியங்களையும் மனத்தில் சேர்க் கின்றான்; பின் அந்த மனத்தை ப்ராணவாயுவில் ஒன்றுகூட்டுகின்றான்; அதன்பின் அந்த ப்ராணவாயுவை ஜீவாத்மாவிடத்துச் சேர்க்கின்றான்; பிறகு இந்த நிலையைப் பெற்ற ஜீவாத்மாவை ஐந்து பூதங்களுடன் கூட்டுகின்றான். இதற்குப் பிறகு இதனால் ஜீவாத்மாவுக்கு உண்டான களைப்பு நீங்குமாறு அதைத் தன்னோடு அணைத்துக்கொள்கின்றான். பின், பதினொன்று த்வாரமுள்ளதாய், இதுகாறும் அந்த ஜீவனுக்குத் துன்பத்தைத் தந்துநின்ற சரீரமாகிய சிறையினின்றும் அர்ச்சிராதி மார்க்கத்திற்குத் தலைவாசலாகிய ப்ரஹ்மரந்த்ரத்தின் வழியாய் ஜீவர் களாகிய நம்மை வெளியேற்றத் திருவுள்ளங்கொண்டான். இங்ஙனம் சரீரத்தினின் று வெளியேறுவதே ஆறாவது படியாகும்.**

*************************************************************

ஜீவனுடைய சரீரம் ஐந்து பூதங்களாலாகியது. சரீரத்தில் முதுகின் மேற்புறத்தில் தூண்போன்ற மூன்று எலும்புகள் ஒன்றுகூடி நிற்கின்றன. அவற்றுக்கு த்ரிஸ்தூணமெனப் பெயர் வழங்கும். மரணகாலத்தில். ஈசுவரன் அவற்றைக் கடைந்து அங்கிருந்து ஐந்துபூதங்களின் ஸூக்ஷ்மமான அம்சத்தை எடுத்து அதில் ஜீவனைச் சேர்க்கின்றான். இங்ஙனம் கடைதலே த்ரிஸ் தூணக்ஷோபமெனப்படும். இவ்வாறு கடையும்போது ஜீவனுக்கு மிக்க வேதனையுண்டாகும். இந்த வேதனை நீங்குவதற்காக அந்த ஜீவனை ஈசுவரன் தன்மீது அணைத்துக்கொள்கின்றான். (இவ்வம்சங்கள் மரணமடையும் அனைவருக் கும் பொதுவாகும்)

பின் மோக்ஷத்திற்குச் செல்ல உரியனான ஜீவன் ஸ்தூல சரீரத்தினின்று புறப்பட்டதும் இவனை அக்நி முதலிய ஆதிவாஹிகர் கள் எதிர்சென்றுவரவேற்று வழிநடத்திப்போய் உபசரித்துத் தங்கள் தங்கள் எல்லைவரையில் கொண்டுபோய் விடுவார்கள். இவ்வாறு ப்ரக்ருதிமண்டலத்தைத்தாண்டிச் சென்றவர்கள் பின்னும் ஸம்ஸார மாகிய நரகத்தில் துன்புறமாட்டார்கள்.

ஈசுவரன், ஜீவனுடைய சரீரத்தில் அந்தர்யாமியாயிருப்பதனால் ப்ரஹ்மத்திற்கு ஸ்தாநமாகிய அச்சரீரம் ப்ரஹ்மபுரமெனப்படுமென உபநிஷத்துக் கூறுகின்றது.

*********************************************************

இதுகாறும் தீவினையால் மோக்ஷ மார்க்கத்தில் மனம் செலுத்தாதிருந்த நம்மை மன்மதன் தேவமாதர்களின் கண்ணாகிய வேலையும் அவர்களின் உடலாகிய வில்லையும் கொண்டு மயக்க, நாமும் அவர்கள் பேசும் பேச்சையே அமுதமெனக் கருதி ஸ்வர்க்க ஸுகமே பெரிதென மயங்கிக் கிடந்தோம். இப்பொழுது ஸதாசார்ய கடாக்ஷத்தால் அந்த மயக்கம் நீங்கப்பெற்றோம். கடலின் கழிநீரைக் கண்டு அதையே கடலெனக் கருதும்

மூடரைப்போல், ப்ரஹ்மத்திநிடமிருந்து உண்டான இந்த உலகத்தைக்கண்டு இதையன்றி இதற்குக் காரணமாய்நிற்கும் ப்ரஹ்மத்தை இசையாது பிதற்றும் பிறமதத்தினர் வீசும் வலையில் விழாது தப்பினோம்; இப்பொழுது பரமபதத்திற் சேர்க்கும் அர்ச்சிராதிகதியைப் பெறும் பெருமை பெற்றோம். அங்கு ஆதிவாஹிகர்கள் செய்யும் உப சாரங்களாலே ஸம்ஸாரத்தில் அநுபவித்த துக்கங்கள் மாறி மகிழப் பெற்றோம். இந்த அர்ச்சிராதிகதியே ஏழாவது படியாகும்.

*****************************************************

நாம் இதுகாறும் அற்பமான உலக ஸுகங்களில் ஈடு பட்டு நமக்குத் தகாத வழியில் நடந்துவந்ததால் பெற்ற பயன்யாது? ஒருகால் நாம் ப்ரஹ்மபதத்தையே பெற்றாலும் அதுவும் எத்தனை காலம் நிலைத்திருக்கும்? ஆதலின் ஸம்ஸாரிகளாகிய நமக்கு எம்பெரு மான் காட்டித்தந்த பக்தி - ப்ரபத்திகளுள் ஒன்றை நாம் அநுஷ்டித்து அதனால் பெறப்போகும் ஸ்ரீவைகுண்டமாகிய திவ்யஸ்தாநத்தை அநுஸந்தித்து மகிழ்வோமாக. இப்படி ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்வதே எட்டாவது படியாகும்.

*****************************************************

அநாதிகாலமாகப் புண்யபாபங்களென்னும் கர்மங் களுக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் அல்லலுற்ற நாம், ப்ரபந்நர்களான ஜீவர்கள் அர்ச்சிராதிகதியால் சென்று விரஜாநதியைத் தம் ஸங்கல்பத் தாலே கடந்து ஸ்ரீவைகுண்டத்தை அடைவதைப் பாக்ய விசேஷத்தால் அநுஸந்தித்து நாமும் அப்பேறு பெறுவோமென்று மகிழ்கின்றோம்.இப்பாசுரத்தில் பரமபதத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை ஆகாயத்திலுள்ள மேகமாகவும், பிராட்டியை (நிலைபெற்ற) மின்னலாகவும், பல நிறமுள்ள திவ்யபுஷ்பங்களால் ஆன வைஜயந்தியென்னும் வநமாலையைப் பல நிறத்துடன் தோன்றும் வானவில்லாகவும், அவனது கருணை வெள்ளத்தை மழைநீர்த்தாரையராகவும், விரஜாநதியை

அதனால் பெருகிய அம்ருதமயமான நதியாகவும் வர்ணித்த கவிசாதுரியம் அனுபவிக்கக் தக்கதாகும்.

*****************************************************

பெரியபிராட்டியார் எப்பொழுதும் பிரியாது வாழ்கின்ற ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யஸ்தானமாகிய ஸ்ரீ வைகுண்டத்தை நாம் அடைந்து அங்கு நித்யகைங்கர்யம் செய்யும் நித்யஸூரிகளுடனும் முக்தர்களுடனும் சேர்ந்து ஸாமகானத்தையும் ஆழ்வார்ஸ்ரீஸூக்தி களின இன்னிசையையும் பாடி ஸ்ரீவைகுண்டநாதனை எந்நாளும் அநுபவிப்போமாக.

*****************************************************

